தமிழ்நாடு அரசு

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

மதுரை மாவட்டம்.

வட்டாட்சியர் அலுவலகம்,திருமங்கலம் வட்டம்,

அறிவிக்கை எண்: 01/2025

நாள்: 17.10.2025

வேலைவாய்ப்பு அறிவிப்பு

மதுரை மாவட்ட வருவாய் அலகு, திருமங்கலம் வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் விண்ணப்பிக்கலாம்.

| | |
|---|---|
| விண்ணப்பம் பெறப்படும்நாள் | 17.10.2025- முதல் |
| விண்ணப்பம் அளிப்பதற்கான இறுதிநாள் | 15.11.2025 மாலை 5.45 மணிக்குள் |
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| ஊதியவிகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100 -35,100/- |
| நிரப்பப்பட உள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | 07 |

கிராம உதவியாளர் காலிப்பணியிடங்கள் உள்ள கிராமங்கள்

| வ.எண் | கிராமத்தின் பெயர் |
|---|---|
| 1 | ராயபாளையம் |
| 2 | கிண்ணிமங்கலம் |
| 3 | அலப்பலச்சேரி |
| 4 | ஜாரிசெங்குளம் |
| 5 | சௌடார்பட்டி பிட் - 1 |
| 6 | திருமங்கலம் |
| 7 | திரளி பிட் - 2 |

இனசுழற்சி முறை

| வ.எண் | சுழற்சி எண் | இனம் | பொது/பெண்/ ஆண் | இடஒதுக்கீடு(ம) முன்னுரிமை |
|---|---|---|---|---|
| 1 | 23 | MBC/DNC | பொது | முன்னுரிமையற்றவர் |
| 2 | 24 | BC (Other than BC Muslim) | பொது | முன்னுரிமையற்றவர் |
| 3 | 25 | GT | பொது | முன்னுரிமையற்றவர் |
| 4 | 26 | SC | பொது | முன்னுரிமையற்றவர் |
| 5 | 27 | GT | பொது | முன்னுரிமையற்றவர் |
| 6 | 28 | MBC/DNC | பொது | முன்னுரிமை உள்ளவர் |
| 7 | 29 | GT | பொது | முன்னுரிமையற்றவர் |

தகுதிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | வயது<br>(01.10.2025)<br>இன்படி | குறைந்தபட்சம் 21 வயது நிரம்பியிருக்க வேண்டும்<br>(அனைத்து பிரிவினருக்கும்)<br><br><u>அதிக பட்சம் வயது</u><br>1. பொது பிரிவினர் - **32 வயது**<br><br>2. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC)/ BC(M)/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC) / சீர்மரபினர்(DNC) வகுப்பினர் - **39 வயது**<br><br>3. பட்டியல் இனத்தவர் (SC) /(SC(A) / பழங்குடியினர் (ST) / ஆதரவற்ற விதவை - **42 வயது**<br><br>(அரசாணை (நிலை) எண்:91,மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை,நாள்:13.09.2021-ன்படி மற்றும் அரசின் கூடுதல் முதன்மைச் செயலாளர் அவர்களின்கடிதம்,எண்:636/பணி8(1)/2025, நாள்:18.09.2025-ன்படி வயது நிர்ணயம் செய்யப்படடுள்ளது. | |
| | | முன்னாள் இராணுவத்தினர் | இதர வகுப்பினர் - **வயது 50,**<br><br>பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC)/ BC(M)/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC) / சீர்மரபினர்(DNC) வகுப்பினர்/ பட்டியல் இனத்தவர் (SC) /(SC(A) / பழங்குடியினர் (ST) - **55 வயது**<br><br>(தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம்,2016 மற்றும் அரசாணை (நிலை) எண்:91 மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை,நாள்:13.09.2021-ன்படி) |
| | | மாற்றுத்திறனாளிகள் | நிர்ணயிக்கப்பட்ட வயதிலிருந்து **10 ஆண்டுகள்**<br><br>(தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம்,2016-ன்படி) |
| 2. | கல்வித்தகுதி | | தமிழ்நாடு அரசுத்தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC-Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும்.<br>(குறிப்பு- SSLC-Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்). |
| 3. | இதர தகுதிகள் | | 1. மிதிவண்டி / இருசக்கர மோட்டார் வாகனம் ஓட்டும் திறன்.<br>2. வாசித்தல் மற்றும் எழுதும் திறன்(தமிழில்)<br>3. சம்பந்தப்பட்ட கிராமம்/தாலுகா (திருமங்கலம் வட்டம்) எல்லைக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.(நாளது தேதியின்படி தாலுகா வரம்பிற்குட்பட்டு) (தற்போதைய முகவரிச் சான்றுடன்). |

| | | |
|---|---|---|
| | விண்ணப்பிக்கும்முறை | விண்ணப்பங்கள் மதுரை மாவட்ட ஆட்சியரின் அலுவலக இணையவழி முகவரியான https://madurai.nic.in -இல் பதிவிறக்கம் செய்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுடன், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் எதிர்வரும் 15.11.2025 அன்று மாலை 5.45 மணிக்குள் அனுப்பி வைத்திட வேண்டும். அதற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தமிழ்நாடு கிராம உதவியாளர் பணியமைப்பு விதிகளின்படி தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியான விண்ணப்பங்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது. |

வருவாய் வட்டாட்சியர்
திருமங்கலம்.

17/10/25